# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 15.07.2026**

**முன்னிலை**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 5674/SCIC/2024**

திரு B. இரமேஷ் புகார்தாரர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
மண்டல அலுவலர், ....... பொதுஅதிகார அமைப்பு
மண்டலம் - 14,
பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை 600 014

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 15.11.2024 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 22.11.2024 |
| 3. | மனுதாரரின் புகார் மனு | 27.11.2024 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், மண்டலம் - 14, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 15.11.2024 தேதியிட்டு அனுப்பிய மனுவில் பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் மூலம் தான் பதிவு செய்த எண்கள் 2024-972 SHT, 2024-643 MCF, 2024-533 HDD, 2024-639 RFE, 2024-194 GOM ஆகியவற்றின் மீது இதுவரை (15.11.2024) எடுக்கப்பட்ட நடவடிக்கை காட்டும் ஆவணங்களின் ஒளிநகல்கள் என்பது போன்ற தகவல்களை 3 இனங்களில் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. தான் சென்னை உயர்நீதிமன்றத்திற்கு வேலை நிமித்தமாக செல்லவேண்டியிருப்பதால் தன்னால் ஆணையத்தின் இன்றைய விசாரணைக்கு ஆஜராக இயலவில்லையென்றும், தனது வழக்கினை பரிசீலனை செய்து அதனடிப்படையில் தீர்ப்பு வழங்குமாறும் தெரிவித்து 13.07.2026 தேதியிட்டு ஆணையத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளார். பொதுத் தகவல் அலுவலரும் இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. எனவே, இவ்வழக்கானது பிறிதொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

3. ஆணையத்திலிருந்து அழைப்பாணை பெறப்பட்ட பின்னரும் எந்தவித முன்னறிவிப்புமின்றியும் பொதுத் தகவல் அலுவலர் இன்றைய விசாரணைக்கு ஆணையத்தில் நேரடியாக ஆஜராகவில்லை. **எனவே, இன்றைய விசாரணைக்கு ஆஜராக காரணத்தால் திரு மனோகரன், பொதுத் தகவல் அலுவலர் / செயற்பொறியாளர், மண்டலம் - 14, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை என்பவர் மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்பதற்கான தனது விளக்கத்தினை மேற்படி அலுவலர் ஆணையத்தின் அடுத்த விசாரணையின்போது நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 5674/SCIC/2024</u>**

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மண்டல அலுவலர்,
மண்டலம் - 14,
பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை 600 014

திரு மனோகரன்,
பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர்,
மண்டலம் - 14,
பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை 600 014

**மனுதாரர்**
திரு B. இரமேஷ்,
வழக்குரைஞர்,
த/பெ பாலசுப்பிரமணியம்,
பிளாட் எண்.32, இராஜேஸ்வரி நகர் பிரதான சாலை,
உள்ளகரம், சென்னை 600 091

**நகல்**
ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை 600 035

TK/PS